NOT FOR SALE

Niru Tuition
CENTRE
Kondavil

A/L 88
வெப்ப இரசாயனம்
திரு. செல்வா
B. Sc. (Hons.)
சனி } 8 -- 9 a m
ஞாயிறு }

உதயன்

விலை:
ரூ. 1-25

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

A/L 89 பிரிவு - 2
பௌதிகம்
திரு. சௌந்தி
B. Sc. (Hons)
ஆரம்பம்: 14 - 4 - 87
செவ்வாய் 7-15 a m.
நேர அட்டவணை
செவ், வியா. 7-15
நிரு டியூசன்
சென்ரர்
கோண்டாவில்.

சுடர் 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு சித்திரை மீ 1 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ஷஃபான் பிறை 14 (14-04 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 118

இருபது வரை இந்திய அரசு அவதானிக்கும்

இலங்கை சொன்னதை

செய்த பின்னரே பேச்சு முயற்சி

புதுடில்லி, ஏப். 13

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா இம்மாதம் இருபதாம் திகதிவரை பொறுத்திருக்கும்.

இலங்கை அரசு சொன்னதைச் செய்கிறதா என்பதை அவதானித்து, அப்படிச் செய்த பின்னரே பேச்சுக்களை நடத்துவதற்கான முயற்சியில் ஈடுபடும்.

இவ்வாறு மத்திய அரசு உயர் வட்டாரங்கள் முடிவு செய்திருப்பதாக புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய வந்துள்ளது.

இலங்கை அரசு ஒருதலைப்பட்சமாக அறிவித்துள்ள 10 நாள் யுத்த நிறுத்த முடிவு வரை பொறுத்திருந்து பார்ப்பது என்று இந்திய அரசு வட்டாரங்கள் முடிவு செய்துள்ளனவாம்.

பத்து நாள் யுத்த நிறுத்த முடிவில் யாழ் குடாநாட்டுடனான தொலைத் தொடர்பு சேவையை மீண்டும் ஆரம்பிப்பது என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது அல்லவா?

சொன்னபடி அந்த முடிவை செயற்படுத்துகின்றதா என்பதைப் பார்த்த பின்னரே, இரு தரப்புப் பேச்சுக்களுக்கான முயற்சியில் ஈடுபடுவது என்று இந்திய உயர் அதிகாரிகள் மட்டத்தில் முடிவாகி இருக்கிறதாம்.

இதே வேளை—

யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்த கடந்த சனிக்கிழமை தொடக்கமே தொலை பேசித் தடையையும், எரிபொருள் தடையையும் நிபந்தனை எதுவும் இன்றி முற்றாக நீக்க வேண்டும் என்று இலங்கை அரசு முதலில் முடிவு செய்ததாகவும் ஆனால் திடீரென அந்த முடிவை மாற்றி, போராளிகளுக்கு நிபந்தனை விதிப்பது போல அறிவிக்கப்பட்டதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யுத்த நிறுத்த காலத்தில் போராளிகள் அமைதி பேண ஒத்துழைப்பு நல்கினால் இந்தியாவுக்கு ஓர் அமைச்சர் மட்டத் தூதுக்குழுவை அனுப்புவது என இலங்கை அரசாங்கம் உத்தேசித்திருப்பதாகவும் அறிய வருகிறது. (ஆ-எ)

மூவருக்கு ஏற்பட்ட பயங்கர முடிவு

யாழ்ப்பாணம், ஏப்.14

பஸ்ஸிலிருந்து இறங்கி தப்பி ஓட முயன்ற மூன்று இளைஞர்கள் மீது சிப்பாய்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று இளைஞர்களும் கொல்லப்பட்டனர்.

சனிக்கிழமை காலை திருகோணமலை செல்வநாயகபுரம் பகுதியில் இச் சம்பவம் நடைபெற்றது. (இ-10)

புதுவருட விடுமுறை கொடுப்பதற்காகவா ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தம்?

இந்து செய்திக்கு இலங்கை மறுப்பு

கொழும்பு,ஏப்ரல் 14

சிப்பாய்களுக்கு புது வருட விடுமுறை கொடுப்பதற்காகத்தான் அரசு ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை பிரகடனப்படுத்தியது என்று 'இந்து' நாளிதழ் வெளியிட்ட செய்தியை இலங்கை வெகுஜன தொடர்பு நிலையம் மறுத்திருக்கிறது.

'இந்து' செய்தி வருமாறு:-

வடக்கு, கிழக்கு முகாம்களில் உள்ள அரசப் படையினர் தங்களுக்கு புத்தாண்டு விடுமுறை வழங்கப்படவேண்டும் என்று மேலிடத்தை வற்புறுத்தி வந்தனர். இதன் காரணமாகவே அரசு ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தியது.

துருப்புக்கள் பரிமாற்றத்தை நடத்துவதற்கும் யுத்த நிறுத்த காலத்தை பயன்படுத்த அரசு எண்ணியிருக்கிறது.

இப்படி இந்து தனது 11ஆம் திகதி இதழில் செய்தி வெளியிட்டது.

இதனை வெகுஜனத் தொடர்பு நிலையம் மறுத்துள்ளது

துருப்புக்கள் பரிமாற்றம் நடந்து முடிந்துவிட்டது. விடுமுறை கோரி சிப்பாய்கள் நிர்ப்பந்திக்கவில்லை இப்படி வெகுஜனத் தொடர்பு நிலையம் தெரிவித்திருக்கின்றது. (இ-எ)

சுவிஸில் அகதிகள் அந்தஸ்து கோரியோரில் 4,500 பேர் தமிழர்

கொழும்பு, ஏப் 14

சுவிஸில் அரசியல் அகதிகள் அந்தஸ்து கோரி விண்ணப்பித்துள்ள சுமார் 20 ஆயிரம் வெளிநாட்டவரில் 4 ஆயிரத்து 500 பேர் வரையில் இலங்கைத் தமிழர்.

இவர்களில் இதுவரை 80க்கு அதிகமானவர்களுக்கு அகதிகள் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரக பொறுப்பதிகாரி திரு. ஹென்றி இயூனெற் முக்கண்டதலை வெளியிட்டார்.

கடந்த ஆண்டில் மட்டும் 8,879 வெளிநாட்டவர் தஞ்சம் கோரி விண்ணப்பித்தனர்.

இவர்களில் 820 பேருக்கு அகதிகள் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (இ-எ)

புத்தாண்டில் தீர்வு எம். ஜி. ஆர். நம்பிக்கை

சென்னை, ஏப். 14

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு புத்தாண்டில் தீர்வு காணப்படும் என்று தமிழக முதலமைச்சர் எம் ஜி இராமச்சந்திரன் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்

புத்தாண்டுச் செய்தியில் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி திரு இராமச்சந்திரன் தெரிவித்திருப்பதாவது;

தமிழர் அச்சமின்றி மரியாதையுடன் இலங்கையில் வாழக் கூடிய அரசியல் தீர்வு ஒன்றைக் காண பிரதமர் ராஜீவ் காந்தி எடுத்துவரும் முயற்சிகள் புத்தாண்டில் வெற்றி பெறும் -

இப்படி முதலமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. எம். பழனியாண்டி தனது புத்தாண்டுச் செய்தியில் பிரதமர் ராஜீவ் காந்தி எடுத்துவரும் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்து இந்த ஆண்டில் இனப் பிரச்சினைக்கு நல்ல விதமாக முடிவுகாண தமிழ்ப் போராளித் தலைவர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (இ-எ)

நாச்சிக்குடாவில் சிப்பாய்கள் அட்டகாசம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 14

பூநகரி நாச்சிக்குடாப் பகுதியிலுள்ள சில கடைகள் சிப்பாய்களினால் உடைக்கப்பட்டு பொருள்கள் அபகரிக்கப்பட்டன.

நேற்றுக் காலை இச்சம்பவம் நடைபெற்றது.

மன்னார், பூநகரி இராணுவ முகாம்களிலிருந்து வந்த ஆயிரக்கணக்கான சிப்பாய்கள் நாச்சிக்குடா பாடசாலையில் தங்கியுள்ளனர்.

ஸ்ரீ லங்கா அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட யுத்த நிறுத்தத்தையும் மீறி இவர்கள் நேற்று இந்த அபகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதேவேளை பாடசாலை ஒன்றும் இந்துக் கோவில் ஒன்றும் சிப்பாய்களினால் சேதப் படுத்தப்பட்டுள்ளன.

சிப்பாய்களின் இந்த நடவடிக்கைகள் காரணமாக ஏராளமான மக்கள் இடம் பெயர்ந்து வேறிடங்களுக்குச் சென்றுள்ளனர். (இ-10)

ஐவருக்கு மின்கம்பத்தண்டனை

யாழ்ப்பாணம், ஏப். 14

திருகோணமலையில் நேற்று மூன்று தமிழர்களும் இரண்டு முஸ்லிம்களுமாக ஐந்து பேருக்கு மின்கம்ப மரண தண்டனை வழங்கப்பட்டதாக வெகுஜனத் தொடர்பு நிலையம் அறிவித்தது.

திருகோணமலை - புல்மோட்டை வீதியில் அரும் கம்பட்டையில் இச் சம்பவம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

வாழ்த்துகிறோம்

உதயன் - சஞ்சீவி
வாசகர்களுக்கும்,
செய்தியாளர்களுக்கும்,
விளம்பரதாரர்களுக்கும்,
விநியோகஸ்தர்களுக்கும்,
ஆதரவாளர்களுக்கும்,
அபிமானிகளுக்கும்,
புத்தாண்டு வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

போகம்பரையில் 10 தமிழ் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம்

கொழும்பு, ஏப் 14

கண்டி, போகம்பரைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் பத்துப் பேர் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

கடந்த சனிக்கிழமையில் இருந்து இவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள பத்து தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்தே கண்டி போகம்பரைச் சிறையில் இருப்பவர்கள் உண்ணாவிரதத்தைத் தொடங்கியிருக்கின்றனர் என்று அறிவிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

கடல் மார்க்கமாக வெளியேறமுயன்றசிப்பாய்கள்

யாழ்ப்பாணம்,ஏப்ரல் 14

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து நாவாந்துறை, சிறுத்தீவு பகுதியை நோக்கி கடல் மார்க்கமாக சிப்பாய்கள் வெளியேற முயற்சித்தனர்.

நேற்றுப் பகல் 1 மணியளவில் இச்சம்பவம் நடந்தது.

போராளிகள் உஷாரடைந்தபோது சிப்பாய்கள் முகாமுக்கு திரும்பிச் சென்றனர்.

ஹெலிகொப்டர் ஒன்றும் யாழ். நகர்ப் பகுதியை பல தடவை சுற்றி வட்டமிட்டது (இ-10)

யுத்த நிறுத்தம் தொடர்பாக

முன் நிபந்தனை எதற்கும் நாம் அடிபணிய மாட்டோம்

பிரபாகரன் கூறுகிறார்

சென்னை, ஏப். 14

யுத்த நிறுத்தம் தொடர்பாக நாம் எந்த ஒரு முன் நிபந்தனைக்கும் அடிபணிய மாட்டோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு வேலுப்பிள்ளை பிரபாகரன் தம்மைச் சந்தித்த யாழ் பிரசைகளிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று "இந்து" நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் ஒத்துழைப்புடன் இலங்கையுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார். டிச. 19 யோசனையை அடிப்படையாக வைத்து பேச்சுவார்த்தையை நடத்தலாம். ஆனால், அது இறுதித் தீர்வு அல்ல.

பேச்சு வார்த்தைக்கு முன்னோடியாக எரிபொருள், தொலைத்தொடர்பு தடைகள் அகற்றப்பட வேண்டும். இராணுவ நடவடிக்கைகளையும் அரசு நிறுத்த வேண்டும்.

இப்படி திரு பிரபாகரன் கூறினார் என்று இந்த நாளிதழ் மேலும் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-ஐ)

இந்திய செய்தியாளர் அழைக்கப்படவில்லை

கொழும்பு, ஏப்.14

யுத்த நிறுத்தம் பற்றிய தகவல் வெளியிட தேசிய பாதுகாப்பு அமைச்சர் நடத்திய செய்தியாளர் மாநாட்டுக்கு கொழும்பில் உள்ள இந்திய செய்தியாளர்கள் எவரும் அழைக்கப்படவில்லை.

அவசரமாக செய்தியாளர் மாநாட்டை நடத்தியதன் காரணமாகவே, இந்தியச் செய்தியாளர்களை மாநாட்டுக்கு அழைக்க முடியாது போயிற்று-இப்படி வெகுஜனத் தொடர்பு நிலையத் தலைவர் பேராசிரியர் இலக் ரத்னகார தெரிவித்தார். (இ-எ)

பிரிட்டிஷ் மந்திரி ஜனாதிபதியைச் சந்தித்தார்

கொழும்பு, ஏப். 14

பிரிட்டிஷ் உள்துறை இணை அமைச்சர் டேவிட் வாடிங்ரன் நேற்று ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

சந்திப்பு நுவரெலியாவில் இடம்பெற்றது

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் இச் சந்திப்பின்போது கூடவிருந்தார்.

வெளியுறவு அமைச்சர் ஜனாப் சாகுல் ஹமீதை பிரிட்டிஷ் அமைச்சர் ஏற்கனவே கொழும்பில் வைத்து சந்தித்துப் பேசினார். (இ-எ)

வாசகர் கவனத்துக்கு

இன்று தமிழ்ப் புத்தாண்டு அதையொட்டி உதயன்-சஞ்சீவி பணியாளர்களுக்கு விடுமுறை.

அதனால் நாளை புதன்கிழமை (15-4-1987)மட்டும் உதயன் நாளிதழ் வெளிவர மாட்டாது.

வியாழக்கிழமை உதயன் வழமைபோல் வெளிவரும்.

புதுவருட புண்ணிய கருமம்

14 - 04 - 87
செவ்வாய்க்கிழமை
பிரபவ வருடம்
பிறக்கும் நேரம்:-
இன்று காலை 6-33

விஷு புண்ணியகாலம்:-
அதிகாலை 2-09 முதல் முற்பகல் 10-30 வரை

இவ்வேளையில் மருத்துநீர் தேய்த்து சிவப்பு நிற ஆடை அணிந்து இஷ்ட தெய்வ தரிசனம் செய்து முத்தோர் ஆசி பெறுதல் சிறப்புடைத்து.

கைவிசேஷம்

சித்திரை 2 ஆம் திகதி ஆதாவது நாளை புதன் கிழமை (15-04-1987) முற்பகல் மணி 9-50 முதல் நண்பகல் 12-00 மணி வரையுள்ள சுபவேளையில் கைவிசேஷம் பரிமாறிக்கொள்ளலாம்.

அல்லது சித்திரை 3 ஆம் திகதி ஆதாவது நாளை மறுதினம் (16-04-1987) வியாழக்கிழமை முற்பகல் 9-55 முதல் நண்பகல் 12-00 மணிவரையுள்ள சுபவேளையிலும் கைவிசேஷம் பரிமாறிக் கொள்ளலாம்.

நாள் வேலை ஆரம்பம்

நாளை புதன்கிழமை (15-04-1987) முற்பகல் 10-00 முதல் நண்பகல் 12-00 மணி வரையுள்ள சுபவேளையில் நாள்வேலை முதன்முதலாக ஆரம்பிக்கலாம். அல்லது 16-04-1987 வியாழக்கிழமை பகல் 9-39 முதல் 11-55 வரையுள்ள சுபவேளையிலும் ஆரம்பிக்கலாம்.

அல்லது சித்திரை 21 ஆம் திகதி திங்கட்கிழமை (04-05-1987) காலை 9-06 முதல் 10-42 வரையுள்ள சுபவேளையில் ஆரம்பிக்கலாம்.

இன்றைய சுபநேரம்:
சுபநேரம்:
10-35 முதல் 12-05வரை
ராகுகாலம்:
3-05 முதல் 4-35 வரை



புதுவருஷம் இன்னைக்கு. வலு அடக்கமாய் கொண்டாடுங்கோ. அவ்வளவுதான் சொல்லலாம் எல்லாருக்கும் என்ரை புத்தாண்டு வாழ்த்துக்கள்!

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

விக்கினம் போக்கி வெற்றி தரும் விநாயகன்

நேபாளம் முதல் மெக்சிக்கோ வரை அடியார்கள்

வே, வரதசுந்தரம்

சுபகாரியங்களை ஆரம்பிக்கு முன்னர் ஆனைமுகத்தானும்பிள்ளையாரை வழிபடுவது இந்துக்களின் வழக்கு. புது வருட சமய கலாசார நிகழ்ச்சிகளிலும் இச்சம் பிரதாயத்தைக் காணலாம்.

சுபகாரியங்களைச் செய்யமுன்னர் இத்தாலிய மக்கள் இருமுனங்களை உடைய வயல் காப்புத் தெய்வமான ஜேனஸை வணங்குவார்கள். செழிப்புக்கும், உணவுப் பயிர் அறுவடைக்கும் உரிய கடவுளாக ஜேனஸை உரோமர்கள் போற்றியது போன்று நாமும் விநாயகரை வழிபடுகிறோம்.

நம்மிடையே விநாயகருக்குத் தனியே கோயில்கள் இருப்பதுடன் ஏனைய தெய்வங்களுக்கு உரிய கோயில்களிலும் விநாயகர் வழிபாடு முதலிடம் பெறுகிறது. பௌத்த கோயில்களிலும் விநாயக வழிபாடு உண்டல்லவா?

நேபாளம், திபெத், பர்மா, இந்தோசீனா, ஜப்பான், கிரேக்கம், மெக்சிக்கோ போன்ற பலநாடுகளிலும் இவ்வழிபாடு பரவியிருப்பதைக் காண்கின்றோம்.

தமிழகத்தில்

தமிழ்நாட்டில் எப்போது விநாயகர் வழிபாடு தொடங்கியது? கி. பி. 630—668 காலப் பகுதியில் பல்லவன் சாளுக்கிய அரசர்களைப் போரிலே வென்ற பின்னர் வாதாபி என்ற இடத்திலிருந்த பிள்ளையாரைத் தமிழகத்துக்குக் கொண்டுவந்தான். அதன்பின்னர் நம்மிடையே உருவெடுத்தது விநாயகர் வழிபாடு

புத்தர் போற்றுகிறார்

அசோகப் பேரரசனின் புதல்வியான சாருமதி நேபாளத்தில் விநாயகருக்குக் கோயில் கட்டி வழிபாடு செய்துள்ளார். அத்தோடுபுத்தபிரான் தனது சீடரான ஆனந்தருக்கு கணபதி மந்திரத்தை உபதேசம் செய்துள்ளார். இந்த நம்பிக்கை இன்றும் நேபாளத்தில் உண்டு

உருவ அமைப்பு

விநாயகப் பெருமானின் உருவ அமைப்பில் எமக்குப் பார்த்த மாத்திரத்தே சடுபாடு தோன்றும்

இவ்வுருவ அமைப்பில் உயர்திணை அஃறிணை இரண்டும் கலந்து தோன்றும். ஆனைமுகம் அஃறிணையையும், ஐந்து திருக்கைகள் தேவரையும், உடல் மனிதர்களையும், கால்கள் பூதங்களையும் குறிக்கும்.

விநாயகப் பெருமானை ஐந்து கரத்தோன் என்று அன்பாக அழைப்போம் படைத்தல், காத்தல் அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களையும், திருவைந்தெழுத்தையும் இது குறிப்பதாக நாம் நம்புகிறோம்.

சித்திவிநாயகர்

தேவலோகக் கற்பகதரு வேண்டுவன எல்லாம் தரும் பிள்ளையாருக்கு வேண்டுவன வேண்டுவார்க்கு ஈவான் என்பதாலே அவர் சித்திவிநாயகர்.

எமக்கு ஆபத்தா? உடனே விநாயகர் ஓடோடி வந்து துடைக்கின்றார் என்பதால் அவர் 'ஆபத்சகாய விநாயகர்'.

அடியவர்கள் சிந்தையிலே விரும்பும் ஆசைகளை நிறைவேற்றும் பெம்மான் என்பதால் அவர் சிந்தாமணிப் பிள்ளையார்.

மேருமலையை ஏடாக்கி, தமது தந்தத்தையே எழுத்தாணி ஆக்கி வியாசர் கூற மகாபாரதத்தை எழுதிய கடவுள் விநாயகர் என்பதால் அவர்– 'ஐயர் சீர்வரைந்த பிள்ளை'.

சைவப் பெருமக்களின் பெருஞ் சொத்தாம் புனித தேவார திருப்பதிகங்கள் சிதம்பரத்தில் புதையுண்டு கிடப்பதை பொல்லாப் பிள்ளையார் மூலமே நம்பியாண்டார் நம்பி அறிந்தார் 'செதுக்கப்படாது' பொள்ளுதல் இன்றி உருவான பிள்ளையார் என்பதாலே அவர் — 'பொல்லாப் பிள்ளையார்'.

இப்படி நம் வாழ்வில் இரண்டறக் கலந்த விநாயகப் பெருமான் மன அமைதியைத் தருவான். செல்வச் சிறப்பைத் தருவான். வெற்றி தருவான் ★

சித்திரை நிலவே!

யுத்த மேகங்கள்
பீதிகள் களைந்து புது
யுகமொன்று பிறந்திடவே
சத்திய வெள்ளமும்
சன்மார்க்க போதமும்
சார்ந்திட மனதில் எங்கும்
நித்திய தூய்மைகள்
நிறைந்த நல்லன்பு
நிலவிட வழி சமைத்திடுவாய்
சித்திரை நிலவே
சிரித்திடு மலரே
சிறந்திடு புத்தாண்டே!

வெம்மையும் இருளும்
வெந்தணல் மனங்களும்
வெகுண்டெழுந் தபோதும்; குருதிச்
செம்மையும் கறுப்பும்
சேர்ந்ததால் வாழ்வு
செத்து மடிந்ததும் போதும்
இம்மையும் மறுமையும்
இன்பமே நல்கும்
இதயமே தா இறைவாநீ
அம்மையே அப்பா
அன்பினை உலகிற்(கு)
அளித்திடு புத்தாண்டில்!

— நெடுந்தீவு லக்ஷ்மன்

சித்திரைத் தாயே செல்வமே வருக!

சித்திரைப் பெண்ணே செந்தமிழ் மாதே
புத்தமு தூட்டும் புதுமையே வருக
வாடிய இலைகள் வையகத் துதிர
கூடிய தளிர்எழிற் கோலமே செய்ய
புதுமணப் பெண்ணாய் புன்சிரிப் புதிரும்
அழகிய மரங்கள் செடிகொடி யாவும்
தோழிய ராகச் சூழவே வருவாய்.

மண்ணுல கத்தில் வந்துவந் தேகும்
புன்மைகள் யாவும் பூவைநீ அறியாய்
சந்திரச் சுடரில் பட்டென வீசிக்
வந்ததே தந்தவர் வாயிலைச் சேரும்
தினையினை விதைத்தோர் தினைவரப் பெறுவார்
வினையினை விதைத்தோர் வினையினைச் சுமப்பார்

தட்டர்க ளாகத் துயரமே செய்த
ஹிட்லர் முசோலினி கீழ்நிலை யடைந்தார்
குடிகளை வருத்திக் கோன்முறை பிழைத்த
இடியமின் இன்று இல்லாமற் போனான்
சதிகார நெறியும் தன்னலப் போக்கும்
அதிகார வெறியும் ஆணவ மிடுக்கும்
கொண்டவர் சற்றில் கண்டது அழிவே

அம்மையே! இந்த அனுபவம் பெற்ற
செம்மையோர் எந்தச் ஷெல் விழுந்தாலும்
வானகக் குண்டு மழையென வரினும்
உள்ளம் மயங்கார் உறுதியும் குலையார்
ஆதலால் எங்கள் அம்மையே வருக
சித்திரைத் தாயே செல்வமே வருக
புத்தமு தூட்டிப் பொலிந்திட வருக.

காரை செ: சுந்தரம்பிள்ளை

பிறந்த தின வாழ்த்து

தேவதாசன் தயாளினி

"பகவான் கடாட்சம்" இளவாலை வடக்கு இளவாலையைச் சேர்ந்த தேவதாசன் தம்பதிகளின் அருமை மகள் தயாளினி இன்று(1987-4-14)தனது எட்டாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றார். அவரை உடல் வலுவும் உளவலுவும் பெற்று கலை பல கற்று, வளம் பல பெருகி, பல்லாண்டு காலம் வாழ்வாங்கு வாழ்க என அப்பா அம்மா உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வாழ்த்துகின்றார்கள் (1191)

★ சின்னஞ் சிறு விளம்பரங்கள் ★

விற்பனைக்கு

(புரொயிலர்ஸ்) இறைச்சிக்கான கோழிகள் விற்பனைக்கு உண்டு. கிலோ ரூபா 40/-, [illegible]. கே. கே. எஸ். வீதி, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில். (2826)

ஆங்கிலம் படிக்க விரும்பினால்
அம்மொழியின் ஆரம்ப இலக்கணத்தை தெளிவாகக் கற்றுக் கொள்ளுங்கள். அதற்கு உதவி செய்கிறது.
LEARNER'S ENGLISH
லேணேர்ஸ் இங்கிலிஷ்
இந்நூல் ஆங்கில மொழியின் ஆரம்ப இலக்கணத்தை மிக இலகுவாகத் தமிழ் மொழி மூலம் உங்களுக்குச் சொல்லித் தருகிறது.
G. C E O/L வகுப்பு மாணவர்களுக்கும் நல்ல தேர்ச்சி தரும்
இது ஒரு வரதர் வெளியீடு
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.
ரூபா 16-00

விற்பனையாகின்றன!
புலமைப்பரிசிற் பரீட்சை
(ஆண்டு 6) 1987
இவ்வாண்டு நடைபெற இருக்கும் மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் புலமைப்பரிசில் வழங்குவதற்குமான 6 ஆம் ஆண்டு பரீட்சைக்கான பயிற்சி நூல்கள் விற்பனையாகின்றன.
புதிய கணிதப்பயிற்சி விடைகளுடன் ரூபா 20-00
புதிய தமிழ்ப்பயிற்சி (விளக்கக் குறிப்புகளுடன் 15-00
ஞானசுரபி புத்தகக் கம்பனி
யாழ்ப்பாணம். (1220)

அறிவித்தல்
யாழ்நகரின் 4ம் குறுக்கு வீதியில் உள்ள R. S. R. GREEN PEKING PALACE ஸ்தாபனத்தார் வாடிக்கையாளர் வேண்டுகோளுக்கு இணங்க தொடர்ந்தும் காலை 9. மணி முதல் இரவு 10. 00 மணி வரை தங்கள் தரமான சேவையை இக் கஷ்டமான சூழ் நிலையிலும் நியாயமான விலையில் செய்து வருகின்றனர். என்பதனை இப்புத்தாண்டில் மிக்க மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றனர். R.S R. GREEN PEKING PALACE
T Phone: 24085, 23373 (நிர்வாகம், STAFFS)

NIRU TUITION CENTRE
நிரு டியூசன் சென்ரர், கோண்டாவில்.
எல்லோருக்கும் தங்கள்
● புதுவருட நல் வாழ்த்துக்களை ●
அன்புடன் தெரிவித்துக்கொள்ளுகின்றார்கள்
A/L 89 கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புக்கள்
O/L Day Class
தனித்துவம் மிக்க ஆசிரியர்களின் சிறப்பான சேவையை
உங்களுக்கு வழங்குகின்றார்கள்
★ நிரு டியூசன் சென்ரர் ★
கோண்டாவில்.

எமக்கு எல்லா வகையிலும் உதவிய
வாடிக்கையாளர்கள், நண்பர்கள், நல் ஆதரவாளர்கள் அனைவருக்கும் இப்பொன்னான நன்னாளில் எமது நன்றிகலந்த
புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்ளுகின்றோம்
★ தற்காலத்திற்கேற்ப அழகிய கலைநயம் மிக்க 22 K T, 21KT தங்க நகைகளை ஆடர்செய்து பெற்றுக்கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள் KODAK — FUJI — KONICA — TUDOR — FORTE
★ வர்ண நிழற்படப் பிரதிகள் கம்பியூட்டர் முறையில் பிரதியாக்கம் செய்வதற்கு ஆடர்கள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T' Phone: 23628
"பொய்மை என்றும் நிலைப்பதில்லை"

அன்பர்கள் ,நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
வீடியோப் பிரியர்களே!
உங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமணம், பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா, பிரியாவிடை போன்ற மங்கல நிகழ்ச்சிகளை வீடியோப்படம் எடுத்து நிகழ்ந்தவற்றை நினைவூட்டும் வகையில் கண்டு களிப்புற நீங்கள் நாடவேண்டியவர்கள்.
வீடியோ விஷன் ஸ்தாபனத்தார்!
மங்கல நாட்கள் மகிழ்ச்சிபெறும் வண்ணம் அதிசிறந்த வீடியோப்படம் எடுக்கும் சேவையால் வட இலங்கையில் புகழ்பெற்றவர்கள் வீடியோ விஷன் ஸ்தாபனத்தார்.
மற்றும் சிறந்த வீடியோப் பிரதிகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளவும், ஒலி ஒளி நாடாக்களைப் பதிவுசெய்து பெற்றுக்கொள்ளவும் நீங்கள் மறவாமல் நாடவேண்டிய ஸ்தாபனம்:
VIDEO VISION
213, Power House Road,
JAFFNA.
வீடியோ விஷன்
213, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(எக்காலநிலையிலும் எமது சேவை உங்களை நாடி நிற்கும்)
முக்கிய குறிப்பு: எமக்கு வேறு கிளைகள் இல்லை

அவலம் நீங்க முருகனைக் கும்பிடுக!

தமிழர்களின் இராசி மேடமாகும். இதன் அதிபதி செவ்வாய், இன்று செவ்வாய் இடபத்திற்குள் பிரவேசித்திருக்கிறார். செவ்வாயின் வீடாகிய மேடத்திற்கு 10ம், 11ம் வீடுகள் மகரம், கும்பம். இவை தொழிலுக்கும், லாபத்திற்கும் உரிய வீடுகள். இவ்விரு வீடுகளுக்கும் அதிபதி சனி. இச் சனி மேடத்திற்கு அட்டமத்தானமான விருச்சிகத்தில் பகை பெற்ற நிலையிற்றிருக்கிறார்.

இவர் 1985ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ம் திகதி விருட்சிகத்தில் பிரவேசித்தார் 88ம் ஆண்டு மார்ச் மாதம் வரை அங்கேயே இருப்பார். இந்த அட்டமச் சனியினாற்றான் தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இன்னல்கள் அனைத்தும். இவ்விஷயம் நாடறிந்ததே. தற்போது இடபத்திற்குள் பிரவேசித்திருக்கும் செவ்வாயை இச்சனியானவர் நேர் பார்வையான 7ம் வீடு இடபத்தைப் பார்க்கிறார். செவ்வாய் இடபத்திற்கு மாறிய போதே அட்டமச் சனியின் பார்வையும் பெற்றுவிட்டது. இக்காலத்திற்றான் ஆஸ்பத்திரி ஷெல் தாக்குதலும் நோயாளிகளின் மரண ஓலமும் ஏற்பட்டது.

இச் செவ்வாய் மே மாதம் 15ம் திகதிவரை இடபத்திற்றான் இருப்பார். இக் காலகட்டத்தில் இன்னும் அதிகோரமான தாக்குதல்களும் விபத்துக்களும் ஏற்படக்கூடும்.

மேடாதிபதி செவ்வாய்க்கு அதிபதி சுப்பிரமணியக் கடவுள். தமிழர்களின் குலதெய்வமும் சுப்பிரமணியக் கடவுள் தான். சூரனால் தமிழர்களாகிய தேவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் தற்போது தமிழர்கள் அனுபவிக்கும் இன்னல்கள் போன்றவைதான். அதனால் தேவர்கள் சிவபெருமானிடம் தாங்கள் சூரனால் படும் இன்னல்கள் பற்றிப் பிரலாபித்து முறையிட்டார்கள். இதைச் செவியுற்ற எம்பிரான் சுப்பிரமணியரை உற்பவம் செய்து தேவர்களின் துயர் தீர்க்கும்படி அனுப்பி வைத்தார். அவர் சூராதியரைச் சங்காரம் செய்து தேவர்களைக் காத்தருளினார். இவர் சத்துரு சங்காரன், கலியுகவரதன், தமிழர்களின் குலதெய்வமுமானவர். அவரைத் தமிழர்கள் மறந்தே விட்டார்கள். இதனால் தான் இத்தனை இன்னல்கள்.

நன்றே செய்க. நன்றே செய்யினும் இன்றே செய்க. நாளை நாளை என்பீராகில் நாளை நமது நாளோ நமனது நாளோவென அறியார். இம் முதுமொழியைக் கவனித்து, முருகனிடம் சென்று வழிபாடு செய்து முறைப்பட்டால் கட்டாயம் தமிழர்களின் குறைபாடுகளைக் களைந்திடுவார். ஆதலின் இன்றே முருகப் பெருமானிடம் சென்று முறையிடுங்கள். சரணடையுங்கள். இது உடனடியாக பலனளிக்கும் செயலாகும். ★

சொக்கலிங்க சுவாமிகள்

பொதிகையில் பிறந்த தென்றல்

இனிமை பொதிந்த செந்தமிழ்

இரண்டுக்கும் உள்ள பொதுமை

வருடத்தின் முதலில் வருவது இளவேனிற் பருவம். இதை "வசந்த ருது" என்பர் வடநூலார். இக்காலத்தில் வீசும் காற்று தென்றற் காற்றெனக் கூறப்படும். தென்றற் காற்றிற்கும் தமிழிற்கும் தொடர்பு உண்டு. தென்றற்காற்று பிறந்த இடம் பொதிய மலை. தென் பொதிய மாமுனியாகிய அகத்தியர் தமிழை வளர்த்த தன்மையால் தமிழ் பிறந்த இடமும் பொதியம் என்பர். தென்றலுக்கும் தமிழிற்கும் இனிமை பொதுத்தன்மையானது

தென்றலும் நல் மாணவரும்

இனிமையான தென்றற்காற்றை அருள் தரு தேவி அமலைத்தேக்க பற்பல ஆசான் பாலிற் செல்லும் அறிவுடை நல்ல மாணாக்கனுக்கு உவமிக்கிறது திருவிளையாடற் புராணம்.

நன் மாணாக்கன் ஒருவன் பல நல்லாசிரியரிடமும் சார்ந்து; பலநூற் பொருள்களையுமுணர்ந்து நன்னடை வாய்ந்து சான்ற குணமுடையவனாய் ஒழுகுதல் போல தென்றல் பலவிடங்களிலும் சென்று அங்குள்ள குணங்களைக் கலந்து தண்ணளியுடையதாய் மெதுவாக வீசுகிறது என அப்புராணம் கூறுகிறது

பௌராணிக வித்தகர் வ. குகசர்மா

சின்னஞ்சிறு குழந்தையின் பிஞ்சு மனம் கள்ளம் கபடம் தெரியாதது. புறச்சூழலை மறந்து புத்தாண்டைப் பூரிப்புடன் வரவேற்கிறாள் இந்தச் சிறுமி.

கற்பு நெறி

இளவேனிற் பருவத்தைக் கோடை எனவும் கூறுவர். கோடை மரங்களை வெளிவுறுத்தும் தன்மையது அரும் கோடையால் மரங்கள் வாடும் போது அந்த மரங்களைத் தழுவி நிற்கும் கொடிகளும் வாடி விடுகின்றன. பின்மரம் தளிர்க்கும்போது கொடிகளும் தளிர்க்கின்றன. இக்காட்சி கற்புடை மாதரும், காதலரும் ஈருடல் ஓருயிர் போல இணைந்து. அன்பால் இணைந்து ஒருவர் உறும் இன்ப துன்பங்களை மற்றவரும் உறுகின்ற அன்பு நிலையைக் காட்டுவது.

வெயிலும் நிழலும்

இளவேனிற் பருவத்து மிக்க வெப்பம் நிழலை விரும்பத் தூண்டுதல் போல பிறவித்துன்பமாகிய வெப்பமும் இறைவன் பாதநிழலை விரும்பச் செய்கிறது.

இறைவனைக் கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும் தருவாகவும், அத்தரு தரும் நிழலாகவும், ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீராகவும், மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றாகவும் அக்காற்றில் விளைசுகமாகவும் கண்டார் இராமலிங்க சுவாமிகள்

எந்தை இணையடி நீழல்

திருநாவுக்கரசு நாயனாரை சமணர்கள் வெப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

நாட்டை எண்ண...

நாட்டை எண்ண இதயம் நடுங்குமே!
நரகலான இடத்தில் அழுகிடும்
ஓட்டை வாழ்க்கை உலகில் கிடக்கிறோம்
ஒடிந்து நொந்து சிதைந்து பதைக்கிறோம்
காட்டிலே, புதர்ப் பற்றை மறைவிலே
காயப் பட்டுப் பதுங்கித் துடிக்கிறோம்
மாட்டி, மூர்க்கரால் கீறிக் கிழிக்கவும்
வழி நடந்தும் தவழ்ந்தும் இளைக்கிறோம்.

வீடிழந்து தெருவிலே நிற்கிறோம்
வெட்டப்பட்டும் அடிபட்டும் சாய்கிறோம்
தேடி வைத்த சில பண்டம் சகலமும்
திருடப்பட்ட அகதிகள் ஆகிறோம்
ஓட ஓட விரட்டப் படுகிறோம்
ஓங்கி மோதி உதைக்கப் படுகிறோம்
வாட வாட வதைக்கப் படுகிறோம்
வயிற்றில் ஏறி மிதிக்கப்படுகிறோம்.

வழியில் வைத்து மறிக்கப்படுகிறோம்
வயலில் விட்டுப் பொசுக்கப்படுகிறோம்
சிறையில் இட்டுச் சிதைக்கப்படுகிறோம்
செக்கிலிட்டுத் தலைக்கப்படுகிறோம்
குழியில் இட்டு மசிக்கப்படுகிறோம்
குடல் பிதுங்கச் சுடப்பட்டொழிகிறோம்
அறிவு கெட்டு விழுமட்டும், புல்லரின்
ஆசை தீர நொருக்கப் படுகிறோம்.

வயது போன கிழவர்கள் ஆயினும்
மழலை பேசும் சிறுவர்கள் ஆயினும்
இளமையான மணமகள் ஆயினும்
இனிமையான மணமகன் ஆயினும்
உயிர் போகும் இயமனின் தூதராய்க்
கயமையாகிய பேரினவாதமே
தனது கோர வடிவில் வருவதாம்
தமிழர் வாழ்வின் இறுதியை நாடியே,

இந்தவாறு மனிசர் சிதறுதல்
இன்னும் எத்தனை எத்தனை காலமோ?
சண்டமாருதம் வீசும், நெடியதாய்!
தாங்க வேண்டுமே..,
எத்தனை காலமோ?
எந்தவாறு நாம் தீர்சணம் ஏந்துவோம்,
என்ற ஏக்கம் மறைந்துபோய் நீங்குக.
சண்டை வென்று தமிழினம் ஓங்குக
சமத்துவத்தின் குளிர்மை நிழலிலே.

- முருகையன்

எல்லையில்லாத பரம்பொருளிடம்

எமது புதுவருடப் பிரார்த்தனை

சர்வ வல்லமையும் மகிமையும் பொருந்திய சர்வேசுவரனே! எங்கள் மேல் எல்லையில்லாத அன்புள்ள இறைவனே! உனது பாதங்களைப் பணிந்து உமது புகழைப் பாடுகிறோம். உமது அருட்கொடைகள் எல்லாவற்றிற்கும் எமது இதய பூர்வமான நன்றியைக் கூறுகிறோம்.

இறைவனே! உம்மிடமிருந்துதான் சகல பாக்கியங்களும் கிடைக்கின்றன. அறிவையும் அன்பையும் உம்மூலமே பெற்றுக் கொள்கிறோம். எமது ஆத்ம பரிசுத்தத்திற்காகவும், கட்டுப்பாடும் மேம்பாடுமிக்குள்ள வாழ்விற்காகவும் எமது அபிலாஷைகளை அடைவதற்கும் பொதுநலன் கருதி ஒன்றுபட்டு உழைப்பதற்கும் எமக்கு மனவலிமையைத் தந்தருளும்.

உண்மைக்காகவும் நேர்மைக்காகவும் உழைக்க என்றும் வழிகாட்டியாய் இரும்.

தமிழ் மக்களாகிய எமக்கு பல்லாயிரக் கணக்கான வருடப் பெருமை பெற்ற சீரிய மொழியையும், பண்பாட்டையும், கலாசாரத்தையும் அளித்தமைக்காக நன்றி கூறுகிறோம்.

பூமிப்பந்தின் பல்வேறு நாடுகளில் நாம் குடிமக்களாய் வாழும் பேறு கிடைத்த பொழுதிலும் எமக்கு ஒரு சொந்தத் தாயகம் இல்லையென எண்ணி மனம் வருந்துகிறோம். இது எமது தலைக்குறைவே என எண்ணி அமைதியடைகிறோம்

முடியுடை மூவேந்தர் கொடியோடு வாழ்ந்து நீதியாக ஆட்சி செய்த பொழுதிலும் எமக்கென்று ஓர் தாயகத்தை உருவாக்கி விட்டுச் செல்லவில்லை.

அன்பையும் அறிவையும் தந்த எமக்கு ஒன்றுபட்டு வாழும் பண்பைத் தரவில்லையே என்று நாம் இரங்கும் பொழுதும் எம்மையே நாம் நொந்து கொள்கிறோம்.

இக்கட்டான நேரத்தில் நாம் ஒன்றுபட்டு வாழவும், துன்பங்களைச் சகிக்கவும், அயலவரை நேசிக்கவும், எமது உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும் மனப்பக்குவத்தைத் தந்தருளும்.

ஆட்சிபீடத்தில் உள்ளவர்களுக்கு உண்மையை உணரவும், அறவழி நிற்கவும், சகல இன மக்களும் சுபீட்சத்துடன் வாழ்வதற்கு ஏற்ற ஆட்சியை அமைக்கவும் மன மாற்றத்தைக் கொடுத்தருளும்.

உமது கடாட்சத்தால் வீசும் ஒளிக்கதிர்கள் மூலம் உண்மையை அறிவதற்கும், ஒன்றுபட்டு நிற்பதற்கும், துன்பங்களை எதிர்கொள்வதற்கும் எமக்கு மன உறுதியைத் தந்தருளும்;

நாம் பயமின்றி சுதந்திர மக்களாய் வாழ்வதற்கு எமக்கொரு இனிய தாயகத்தைத் தந்தருளும்படி பிரார்த்தனை செய்கிறோம்.

எமது பாவங்களையும் பிழைகளையும் மன்னித்து நாம் மனிதராய் வாழ்வதற்கு ஒளியாயும் வழிகாட்டியாயும் இருக்கும்படி இதயபூர்வமாகப் பணிவுடன் பிரார்த்தனை செய்கிறோம். ★

க. முத்துக்குமாரசுவாமி

எமது அன்பான
வாடிக்கையாளர்களே! மாணவ மணிகளே!!
ஆசிரியப் பெருந்தகையோரே!!!
அனைவருக்கும்
எமது புதுவருஷ வாழ்த்துக்கள்!
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்
Poopalasingham Book Depot
JAFFNA
Telephone: 23631
Factory: P.B.D. INDUSTRIES
212, First Cross Street, Jaffna
வாடிக்கையாளர்களின் நன்மை கருதி
எமது புத்தகக் களஞ்சியம்
15/3, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்
என்ற விலாசத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

அனைவருக்கும் எங்கள்
புதுவருட நல்வாழ்த்துக்கள்

100% PURE
ANNA
COFFEE
NETT WEIGHT 100 GRAMS
THE ANNA INDUSTRIALS INUVIL.

புதுவருடத்தை முன்னிட்டு மருதடி விநாயகர் வீதியில் அமைந்திருக்கும் அண்ணா கோப்பி விளம்பர நிலையத்தில் அண்ணா கோப்பியையும், அண்ணா உற்பத்திப் பொருள்களையும் வாங்கி இனாம் பொருட்களை பெற்றுக்கொள்ளுங்கள்.
★ ★
அண்ணா தொழிலகம்
இணுவில்.

புத்தாண்டில் சங்கல்பம் செய்வோம்
உள்ளூர் மூலப்பொருட்களை உற்பத்திக்கு எடுப்போம்.
உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு கொடுப்போம்.

MILKWHITE
BAR SOAP

ஹடயோகம்
வாழு முடலை வகையாய் வைக்க
நாளும் ஆசனம் நன்றாய் பழகு
பிண்டத்துள்ள பிராணனொடுக்கி
பண்டத்துள்ள தனைத்தும் வெல்லுக
10 மில்க்வைற் நீலசோப் அல்லது
8 பார்சோப் அல்லது
8 சுப்ப மில்க்வைற் சோப் மேலுறைகளை
யோகாசனப் புத்தகம், சூரிய நமஸ்காரம் விளக்கப் படங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
— மில்க்வைற் யாழ்ப்பாணம்

✳ அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் ✳
✳ எங்கள் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் ✳
பிரயாணத்திற்குத் தயாராகுங்கள்!
உங்களைப் பாதுகாப்பாகக் கூட்டிச் செல்ல
★ GLORIA TRAVELS ★
● ஆயத்தமாக இருக்கிறது ●
★ Seaman ★ DeckBoy ★ Oiler
★ A. B. (Sailor) ★ Mess Boy
ஆகிய துறைகளில் பயிற்சி உள்ளவர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும்
★ பிரான்ஸ் ★ ஜேர்மனி ★ இத்தாலி
ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் கொழும்பிலிருந்து அழைத்துச்செல்வார்
பாஸ்போட், பொண்ட் (BOND), விசா, ரிக்கட் ஆகியனவும் செய்து தரப்படும்
★ GLORIA TRAVELS ★
சின்னத்தம்பி அவெனியூ, மானிப்பாய்.
★ எமக்கு வேறு கிளைகள் கிடையாது (C 20)

எங்கள் புத்தாண்டு
நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்ளுகின்றோம்
உங்கள் இல்லங்களில் நடைபெறும் வைபவங்களை
குறைந்த செலவில் படப்பிரதியாக்கம் செய்ய நாடுங்கள்-
சகலவித கலர் படச்சுருள்களும் குறைந்த செலவில்
படப்பிரதியாக்கம் செய்து கொடுக்கப்படும்
படப்பிரதிகள் யாவும் கொழும்பு HAYLEYS
PHOTO PRINT LTD- யின் உத்தரவாதம் பெற்றவை
AGFA
COLLECTING CENTRE
380, HOSPITAL ROAD,
STATION JUNCTION,
JAFFNA

சித்திரையே உனக்கென்ன சிரிப்பு!

சித்திரையே உனக்கென்ன சிரிப்பு!-எங்கள்
சித்தமெல்லாம் மூண்டதடி நெருப்பு!
இத்தரையில் எமக்கென்ன களிப்பு!-நீ
ஏன்வந்து காட்டுகிறாய் நெழிப்பு!

கோடிகட்டிக் கொண்டாடும் சிறப்பு-எங்கள்
குலத்திற்கு இனிவருமா நடப்பு!
''நாதிஅற்ற தமிழ்வருடப் பிறப்பு''-என்று
நா வழிக்க ஏன் கடந்தாய் கடப்பு!

உயிர் குடிக்கும் தியமனம் தியந்து-எங்கும்
உதயனின் புதியஒளி காய்ந்து
பயமழிந்து நெஞ்சினிக்கும் நாளே-எமக்கு
புதுவருடக் கொண்டாட்ட நாளாம்!

பகலிரவாய் 'ஷெல்' வெடியின் சத்தம்-செட்டு
வலாரம் சுடுவதிலென் அர்த்தம்!
சுதந்திரமாய் நாம் வாழும் நாளே-எமக்கு
சுபநாளாம்! அதுவருச நாளே!

ஒருகுறையும் காணாமல் மக்கள்-உடல்
உளம்மகிழ வாழ்வதற்குத் தக்க
புதுவாழ்வை ஏற்படுத்தித் தந்தால்-நாம்
புத்தாண்டை வாழ்த்திடுவோம் என்றும்!

அதுவரைக்கும் எமக்கில்லை திருநாள்-நாம்
ஆம்மலரா திருக்கையிலேன் பெருநாள்!
புதியவனே, சித்திரையே எங்கள்-வாழ்வை
புதுமைபெறச் செய்திடடி இன்றே!

- செ. குணரத்தினம்

பிரார்த்தனை ஒன்றேதான் பிராணனுக்கு ஆதாரம்

- இராசையா ஸ்ரீதரன் -

பிறந்தது புத்தாண்டு சித்திரைப் பெண்ணானவள் - தளிர் நடை நடந்து மெல்ல மெல்ல வருகின்ற குழவி போல் காலடி எடுத்து வைத்துவிட்டாள் அசுப என்றவள் விடை பெற்றேக, பிரபவ என்பவள் நடை பயின்று வந்திட்டாள் அவள் உண்மையில் ஓர் அழகுப் பெண்தான். அவளிடம் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் எதிர் பார்த்து ஏங்கும் உள்ளங்கள் எத்தனை எத்தனை

இவ்வருடம் சுபீட்சத்தையும் சுகவாழ்வையும் கொடுக்கவல்லது இற்றைவரை துன்பம் அனுபவித்த யாம் இனியாவது இன்பத்தைத் துளியாவது அனுபவிக்க முடியாதா என அங்கலாய்க்கும் ஆதங்கம் ஆங்காங்கே பரவலாய்க் காணப்படுகின்றது.

'தர்மம் தலைகாக்கும்; தக்க சமயத்தில் உயிர் காக்கும்' என்பதிற்கிணங்க இன்று முதல் இரக்க சிந்தை மேலீட்டினால் அறஞ் செய்ய சங்கற்பித்துக் கொள்ளல் வேண்டும்.

'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அதவும் பிறன் பழிப்பதில்லாயின் நன்று'

என்ற வான்புகழ் வள்ளுவரின் வாக்கு இங்கு நோக்கற்பாலது அறத்தின் வழி நின்று அறவாழ்வு வாழ்ந்தால் இவ்வுலகில் துன்பத்துக்கே இடமில்லை. அதைப் பெறுவதென்பது மிகவும் கடினமான தொன்றாகும். அதற்கு மன ஒருமைப்பாடு அத்தியாவசியம்

புத்தாண்டு பிறந்திருக்கும் இந்த வேளையில் நாம் சன்மார்க்கத்தின் மூலம் இறையன்பைப் பெற முயற்சிக்க வேண்டும்.

பழைய அத்தியாயம் ஒன்றை முடித்து இனிப் புதிய அத்தியாயம் தொடங்க வேண்டும்

'கர்மவினை அனுபவித்தே ஆகவேண்டும் கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே' என்கிறது பகவத் கீதை

ஆண்டவன் அருள்

மகாபாரதத்திலே கிருஷ்ணபகவான் இல்லையேல் பாண்டவர் தோல்வியே அடைந்திருப்பர். ஆண்டவனின் அருள் இல்லாமல் அமைதி பெறமுடியாது ஆன்மீக நெறியில் ஈடேற்றம் பெற பிரார்த்தனை வைத் தவிர வேறு வழியில்லை.

பிரார்த்தனை, ஜெபம், பஜனை இவற்றின்தான் இறைவனை இறைஞ்ச முடியும். நீள நினைந்தடியேன் உமை நித்தலும் கை தொழுவேன்' என்றார் சுந்தரர் எப்பொழுதும் அவன் நினைவாகவே இருந்தால் அல்லல் எமை அணுகாது ஆலயத் தரிசனம் பாபவிமோசனம் தரவல்லது

ஆன்மா லயப்படுவதற்கு ஆலயமே குரு பீடம். 'இந்தாகுல மானவை தீர்த்தெனை யாள் சுந்தா' என்றார் அருணகிரிநாதர். 'ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம் இன்பமே என்னாளும் துன்பமில்லை' என்றார் அப்பரடிகள் எனவே நோயற்ற வாழ்வான குறைவற்ற செல்வத்தைப் பெற பிரார்த்திப்பதே நாம் செய்யக்கூடியதொன்றாகும்.

நாவுக்கரசர் தமக்கு நேர்ந்த துன்பத்தை எல்லாம் சிவபெருமானின் திருவருட்டிறத்தினால் வென்றார். பிரகலாதன் நாராயண நாம ஜெபத்தினால் தன் தந்தையையே வென்றான். ஒரு முனிவர் மரா மரா என்றே முத்திவழி கண்டார். சீதா பிராட்டியானவள் பிரார்த்தனை மூலமே தன் பிராண நாயகரை அடைந்தாள்.

ஆகவே சமகாலப் பிரச்சினையில் சிக்குண்டு தவித்துத் தத்தளிக்கும் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து பிரார்த்திப்பது மூலம் ஜெயம் பெறலாம் 'சேரவாரும் ஜெகத்தீரே' என அழைத்து அறைகூவப்பட்டால் நாம் அனைவரும் ஒன்றுபடத் தயங்கக்கூடாது.

இறை தியானத்தின் மூலம், பிரார்த்தனை மூலம், பஜனை, ஜெபம் என்பவற்றின் மூலம் நாம் இடர் அகற்றி இனிய வாழ்வு பெறலாம்.

எதிரியை வெல்லும் ஆயுதம் இறைவனிடமே உண்டு. ஆகவே நாம் இறையருளை வேண்டி இறைஞ்சி, இன்னருள் தந்து பகைவனை அழித்து மக்களைக் காக்குமாறு வேண்டுதல் செய்வோம். தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும் வேளையிலே ஆண்டவன் அவதாரம் செய்வான்.

இப்போது தர்மம் குன்றி விட்டது அதர்மம் மேலோங்கி விட்டது. ஆகவே நமது பிரார்த்தனைக்கு ஆண்டவன் நிச்சயம் செவி சாய்ப்பான் அநியாயம் ஒரு நாள் அழியும் தர்மம் என்றும் வெல்லும். அடாவடித்தனம் அழிவது நிச்சயம். இந்தப் புத்தாண்டு முதல் இறைவனின் பார்வை நம் பக்கம் திரும்பட்டும் நமக்குச் சுபீட்சமும் சுகவாழ்வும் கிடைக்கட்டும்.

ஒற்றுமையே பலம்! பிரார்த்தனையே ஜெபம்!! ★

அறுபது வருட பெருவட்டம்

ஆரம்பமாகும் ஆண்டின் தலைநாள்

ச. ஜெயச்சந்திரன்

இந்தியாவின் தென்னகத்தில் தமிழர்களாலும், இலங்கையில் தமிழர்கள், சிங்களவர்கள் ஆகிய இரு இனத்தவர்களாலும் கொண்டாடப்படும் புதுவருடப் பிறப்பே 'மேட சங்கராந்தி'

மேடம் ஒரு ராசி மண்டலம் சூரியன் அவ்விராசி மண்டலத்து முதற்பாகையில் நுழைகின்றான். வருடம் பூராவும் ஒவ்வொரு ராசியினையும் நகர்ந்து நகர்ந்து மீண்டும் 'மேட ரவியாய்' மேடராசியுள் நுழைகின்றான் இதுவே 'மேட சங்கராந்தி'; புதுவருடப்பிறப்பு

இன்று பிறக்கும் 'பிரபவ' வருடம் ஒரு விசேஷத்தை உடையது அறுபது வருட வட்டத்தைக் கொண்டு விளங்குவது தமிழராது வருடக் கணிப்பு பிரபவ முதல் அக்ஷய ஈறாகவுள்ள அறுபது வருடங்களும் இன்று முற்றுப்பெற்று புதியதோர் அறுபது வருட வட்டம் ஆரம்பமாகிறது.

'பிரபவ' வருடம் ஒரு புதிய வருஷப் பிறப்பு மட்டுமல்ல, ஒரு புதிய அறுபது வருஷ வட்டத்தின் பிறப்பும் கூட.

வருடப் பெயர் வரலாறு

மாயையுள் சிக்குண்டார் நாரதர். பெண்ணாய்ப் பிறந்தார். அறுபது குழந்தைகளைப் பெற்றெடுத்தார் பேரிட்டார். அறுபது குழந்தைகளும் இறக்க அவர்களின் பெயர்கள் மட்டுமாதல் நிலைக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார். வரம் கேட்டுப் பெற்றுக் கொண்டார். அவரது குழந்தைகளின் பெயர்களே அறுபது வருடங்களின் பெயர்கள் இப்படி ஓர் கர்ண பரம்பரைக் கதை

மருந்து நீர்

விஷு புண்ணிய காலத்தில் சுக்கு மிளகு, திப்பிலி, மஞ்சள், கோரோசனை போன்ற மருந்துச் சரக்குகளை கோமயம், கோசலத்துடன் கூட்டி, துளசி, வில்வம், அறுகு, விஷ்ணுகிராந்தி போன்ற மூலிகைகளுடன் சேர்த்து மாதுளம்பூ, தாழம்பூ, தாமரைப்பூ. சீதேவியார் செங்கழுநீர் போன்ற பூக்களுடன் சுத்த ஜலத்தில் காய்ச்சி, பெறுவது மருந்துநீர்.

இதைத் தலையில் வைத்து முழுகிப் புத்தாடையுடுத்தி மங்கலகும்பம் 'நிறைகுடம்' வைத்து விளக்கேற்றி இறைவனை வழிபட்டு அறுசுவை உண்டி உண்டு மகிழ்வோடிருத்தல் முறை.

இந்தியாவில் வேப்பம்பூ பச்சடியினை விசேஷமாகப் புதுவருடத்தின் போது உணவில் சேர்த்துக் கொள்வார்கள். மலையாளத்தில் தமது புதுவருடத்தின் போது காய்கறிகள், கனிவகைகள் பூக்கள், நகை நட்டு, அரிசி நெல் எல்லாம் தட்டில் மங்களகரமாகப் பரப்பி சுவாமி அறையில் வைப்பார்கள்.

இங்கு சிலர் வெற்றிலை, பாக்கு, பழம், பூ, அரிசி, உப்பு, மஞ்சள், காசு ஆகிய அட்ட மங்களப் பொருள்களை ஒரு தட்டில் வைத்து சுவாமி அறையினுள் அழகுற வைப்பர்.

புதுவருடங்கள் ஒவ்வொன்றும் வந்து செல்லும். இன்றைய வருடம் அறுபதாவது வருடமே மீண்டும் வந்து செல்லும் 'பிரபவ' ஒரு புதிய வருடப் பிரப்பு மட்டுமல்ல; ஒரு புதிய அறுபது வருட வட்டத்தில் ஆரம்பமும் கூட. ★

அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்களுக்கு
எமது புத்தாண்டு
✳ வாழ்த்துக்கள் ✳
திருமண வைபவங்களுக்குத்
தேவையான
கூறை, காஞ்சிபுரம், பட்டு வேட்டிகள், சூட்டிங், சேட்டிங் வகைகள் மற்றும் நவநாகரிகத்திற்கேற்ற சிறுவர், சிறுமியரின் றெடிமேட் ஆடைகள் இவை அனைத்தையும் பெற்றுக்கொள்ள யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
த. குமாரசாமி
ரெக்ஸ்ரைல்ஸ் 248, K. K. S. றோட்
யாழ்ப்பாணம். T. P 23732
கிளை ஸ்தாபனம்:
செளபாக்கியாஸ்
28, பெரியகடை, யாழ்ப்பாணம் T. P. 23034

[illegible]
தாவடி ஸ்ரீ அம்பலவாண
விநாயகர் அருள்பெற
இனித்திடும் புத்தாண்டு
★ நல்வாழ்த்துக்களை ★
அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.
உதயன் -- சஞ்சீவி
அர்ச்சுனா
விற்பனை முகவர்கள்
V.T. கந்தையா
ஸ்ரோர்ஸ்
தாவடிச் சந்தி,
தாவடி.

வருக வருக புத்தாண்டே
★ அனைவர்களும் துன்பங்கள் நீங்கி புத்தாண்டில் அமைதியும், சுபீட்சமும் உண்டாகுக என பிரார்த்திக்கின்றோம். ★
விரும்பிய நேரம் தயாரித்து
சுவைத்து மகிழ்ந்திட
✳ RADHA NOODLES ✳
ராதா நூடில்ஸ்
தயாரிக்கும் முறை:
1. கொதிக்கும் நீரில் 5 நிமிஷம் மட்டும் அவிக்கவும்
2. நீரை வடித்தபின் உடன் தண்ணீரில் போட்டு. மீண்டும் நன்றாக வடித்து எடுக்கவும்,
3, நல்லெண்ணை, தேங்காய்எண்ணை, நெய் முதலியவற்றில் வெங்காயம், மிளகாய், மரக்கறிகள், கறிவேப்பிலை தாளித்து அதில் போட்டு கிளறி 5 நிமிஷம் மட்டும் விட்டு பரிமாறவும்.
★ ராதா நூடில்ஸ் சில நிமிஷங்களில் தயாரிக்கக் கூடிய போஷாக்குள்ள உணவாகும். ★
S. SUBRAMANIAM and COMPANY
53, K. K. S. Road, Jaffna. 160, Sea Street, Colombo 11.

★ புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் ★
உயர்ரக உருக்கு (Steel) தளபாட
உற்பத்தியின் முன்னோடிகள்!
புதிய அமைப்பில் உறுதியும்
உத்தரவாதமும் கொண்ட
வீட்டு, காரியாலய (Office)
தளபாடங்கட்கு நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
ஜென்ட்டென்ஸ்
K. K. S. வீதி, இணுவில். (C)

✳ வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது ✳
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
ஞானம்ஸ் ஸ்ருடியோ
எம்மால் பிரத்தியேகமாக தருவிக்கப்பட்ட அதி நவீன கம்பியூட்டர் AUTO 707 மூலம் எல்லாவித கலர் பிலிம் சுருள்களை - - - குறைந்த செலவில் - - - வெகு விரைவில் கழுவி பெற்றுக் கொள்ளலாம்,
DEVELOPING:- Rs 25. 00
PRINT P. C:- 5 00
[each]
GNANAMS STUDIO
301, CLOCK TOWER ROAD, JAFFNA
81, Stanley Road Jaffna
T'phone NO: - 23067
ஞானம்ஸ் ஹோட்டல்
[UNDER OWNER'S MANAGEMENT]
பாதுகாப்பு, அமைதியான சூழ்நிலை, அன்பான உபசரிப்பு, அனுபவம் வாய்ந்தவர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் [CHINESE, EASTERN, WESTERN] குடும்பத்துடன் அருந்திச் செல்ல யாழ்நகரில் சிறந்த இடம்
HOTEL GNANAMS
JAFFNA — COLOMBO
Safety Travels Ticket Booking Centre
Contact:
HOTEL GNANAMS
299 Clock Tower Road, JAFFNA.
T'phone No: 22082

உதய சங்கற்பம்

இறைவன் என் இதயத்தில் இருக்கின்றார் என்பதிலும் பார்க்க, நான் இறைவனின் இதயத்தில் இருக்கிறேன் என்று சொல்லிப்பாருங்கள்.

— காலில் ஜிப்ரான்.

உதயன்

இல, 15, [illegible] தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22078
யாழ்ப்பாணம் 14-04-1987 த.பெ.இல. 86

புத்தாண்டு வேண்டுதல்

இன்று தமிழ்ப் புத்தாண்டு

இயற்கைப் பெண்ணுள் வண்ண மலர்களை அள்ளிச் சூடி, எழில் காட்டுவது இளவேனில் காலத்தில்தான். வெப்பத்தின் மத்தியிலும் இளந்தென்றல் இதம் தருவதும் இந்த வசந்த காலத்தில்தான். சித்திரைப் பெண்ணாள் மெல்ல அடி எடுத்து வைக்கும் போதே இயற்கையின் இளமையும் மிளிர்கிறது

தை, மாசியில் அறுவடை முடிந்து பங்குனிக் கடைசியில் அகம் பொலிந்த விளங்கும் அதனை அடுத்துக் கொண்டாட்டம் காண வருவது சித்திரை

தமிழ்மக்களின் ஒவ்வொரு பண்டிகையும், விழாவும் பருவத்தோடு ஒட்டியவை; பண்பாடு கலந்தவை.

புதுவருடம் புதுத்தெம்பு தருவது இனி வரப்போகும் ஈராறு மாதங்களிலாவது கஷ்டங்கள், துன்பங்கள் நீங்கி வாழ்வு வளமாக, பலமாக அமைய வேண்டும் என மனிதர்கள் விரும்புவது இயல்பு.

ஈழத் தமிழர்கள் வாழ்வில் கடந்த வருடமும் கஷ்டமான ஆண்டுகளில் ஒன்றாகக் கழிந்து விட்டது. முந்திய ஆண்டுகளைவிட தமிழ்மக்களுக்கு உயிரிழப்பும், உடைமை இழப்பும் அதிக அளவில் இடம்பெற்ற ஆண்டு என்றும் சொல்லலாம். அக்ஷய வருஷம் அசுர ஆண்டாகவே கடந்து போயிற்று

அரசாங்கத்தினதும், அதன் படையினரதும் அசுரத்தனங்கள் அவ்வருடத்தில் கோரத்தாண்டவம் ஆடின. ஈழத் தமிழன் ஒவ்வொருவனும் வாழ்வா சாவா என்ற இறுதிக்கட்டத்துக்குத் தள்ளப்பட்ட நிலை கடந்த வருடம் நிலவியது.

தமிழ் மக்கள்மீது தனது அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டு, அவர்களது அடிப்படை உரிமைகளைக் கூடப்பறித்தெடுத்து, ஆக்கிரமிப்புச் செய்வதில் அரசுக்கு இசைந்து கொடுத்தது அக்ஷய வருடம்.

மக்கள் மன நிம்மதியற்று, அச்சத்துடனும், பதற்றத்துடனும் நாட்களை ஓட்ட வேண்டியதாயிற்று நிமிடத்துக்கு நிமிடம் அகதியாகும் தமிழர் எண்ணிக்கை அதிகரித்ததும் கடந்த வருடத்தில் தான்.

ஆகையால் புதிய வருடத்திலாவது விடிவு கிடைக்காதா என்று ஒவ்வொரு தமிழ் நெஞ்சமும் ஏங்குவது இயல்பு.

அதர்மம் ஒழிந்து தர்மம் தழைக்க, சண்டை ஓய்ந்து சமாதானம் உண்டாக, தமிழர் இன்னல் நீங்கி இன்பம் பிறக்க, அடிமை இருள் அகன்று சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்று விரும்பாதார் எவரும் இருக்க முடியாது.

ஆனால் அவற்றுக்கான அறிகுறி எதுவும் தென்படுகிறதா என்பதை நாம் சொல்லாமலே நீங்கள் அறிவீர்கள்.

ஸ்ரீலங்கா அரசின் போலித்தனமும், பொய்மையும், சந்தர்ப்பவாதமும் நம்பிக்கையைச் சிறிதளவேனும் தருவதாக இல்லை.

எனினும் தூரத்தே ஒரு சிறிய நம்பிக்கை ஒளிக்கீற்றுத் தெரியாமல் இல்லை.

தமிழ் மக்களின் கஷ்டங்களையும், அவர்கள் அடக்கி ஒடுக்கப்படுவது குறித்தும் சர்வதேச சமூகம் தெரிந்து கொள்ள ஆரம்பித்துள்ளதையே குறிப்பிடுகிறோம்.

ஸ்ரீலங்கா அரசின் உண்மை நிலைமைகளை பல நாடுகள் தெரிந்து கொண்டு உள்ளன அந்த நிலையை வலுப்படுத்தினால் எமது உரிமைகளை வென்றெடுக்க வாய்ப்பாகும்

நல்லது நடக்கும் என்று நாம் வாளாதிருக்க முடியுமா? எமது உரிமைப் போராட்டம் தொடர வேண்டும். அதற்கான மன உறுதியையும், அஞ்சாமையையும், நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். எதையும் தாங்கும் இதயம் வேண்டும். எடுத்த கருமத்தை முடிக்கும் மனவலிமை வேண்டும். நம்மிடையே ஒற்றுமை வேண்டும். நமக்குள் நாமே மோதும் நிலை தோன்றாதிருக்க வேண்டும். நான் பெரியவன் வலியவன் அடுத்தவன் மெலியவன், சிறியவன் என்ற பேதநிலை அகற்றப்பட வேண்டும் கட்டுப்பாடு வேண்டும். இவை யாவற்றையும் எம்மிடம் வளர்க்க புத்தாண்டு தினமாகிய இன்று சங்கற்பம் செய்வோமாக. இறைவன் மீதும் அவனது சக்தி மீதும் நம்பிக்கை வைத்து அவனை வழுத்துவோமாக.

புங்குடுதீவு

குடிதண்ணீர் பிரச்சினை

தீர்க்க பிரான்ஸில் உள்ள அமைப்பு தீவிர முயற்சி

புங்குடுதீவு, ஏப். 14

புங்குடுதீவின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தகுந்த தீர்வு காண்பதற்கான ஆலோசனைகளையும் திட்டங்களையும் தெரிவித்து உதவுமாறு பிரான்ஸில் உள்ள புங்குடுதீவு மக்களின் அமைப்பொன்று கோரியுள்ளது.

இக் கோரிக்கைக்கு இணங்க கடந்த வாரம் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில்இதுதொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது

தீவுப்பகுதி தெற்குப் பிரிவு உதவி அரச அதிபர் திரு சி. சடாட்சர சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில்புங்குடுதீவின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணத்தக்க திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டது.

(இ-131)

மருதடியானை வழிபட்டு

அடியவர்கள் வினைகடிவர்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று இதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

எல்லா உயிர்களுக்கும் புவனங்களிற்கும் ஆதிமூலமாயும் ஓங்கார வடிவாயும் விளங்குபவன் விநாயகப் பெருமான். தன்னை வழிபடும் அடியார்களின் இடர் போக்கி அவர்களுக்கு அருள் புரிதலாலும் வழிபடாதோர்க்கு இடர் விளைத்து, அவர் தமக்கும் அருள் புரிவதாலும், விக்னேஸ்வரன் என்னும் பெயருடன் விளங்குகின்றான் அப்பிரணவமூர்த்தி குடிகொண்டு அடியார்களுக்கு அருள் புரியும் பழமையும் பெருமையும் புதுமையும் வாய்ந்த திருத்தலம் மானிப்பாய் மருதடி ஆலயம்.

இவ்வாலயத்தின் மூர்த்தி விநாயகர் ஆவார் தலம் - மருது, தீர்த்தம் அமிர்தபுஷ்கரணி, இவ்வாலயத்தின் பிரதான வீதியை நோக்கியிருக்கும் ஆலய வாசலில் மிகப் பழமையான மருதமரம் ஒன்று காணப்படுகிறது. மரத்தின் அடிப்பகுதியில் சிறப்பாக இயற்கையாக அமைந்திருக்கும் பொந்திற்குள் விநாயகரின் திருவுருவச் சிலை அமைந்துள்ளது. இம்மருத மரத்தைச் சுற்றி அடியார்கள் இன்றும் வலம் வந்து அமர்ந்து விநாயகரின் திருப்பாடல்களைப் பாடி வழிபடுவது பார்ப்போர் நெஞ்சங்களையும் நெகிழ வைக்கும். இதனாலன்றோ மருதடியானை 'மருதமர நிழலிலே எழுந்தருளி மனக்கவலை மாற்றும் விநாயகர்' எனவும் அழைப்பர்.

ஆலயத்தின் மூலஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையார் திருவுருவம் வடக்கில் நாட்டுக்கோட்டை என்னும் ஊரிலிருந்து அவ்வூர் செட்டியார்கள் மூலமாய் வரவழைக்கப்பட்டு இந்நூற்றுக்கு ஏறக்குறைய இருநூறு வருடங்களுக்கு முன் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது என வரலாறு கூறுகிறது. இது மட்டுமல்லாமல் சிதம்பரம் என்னும் சிவஸ்தலத்தைப் போல மருதடி விநாயகர் ஆலயமும் யோகநிஷ்டை கைவந்த சிவயோகி ஒருவரால் ஸ்தாபிக்கப்பட்டு பூசித்து வந்த புண்ணியஸ்தலம் எனவும் வரலாறு கூறுகின்றது

இத்தகைய பெருமை வாய்ந்த இத்தலத்தில் இன்று இரதோற்சவம். இம்முறை புதிதாக பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகமும் அதைத் தொடர்ந்து 45 தினங்கள் அபிஷேகமும் பஞ்சமுக அர்ச்சனைகளும் நடைபெற்றன. பஞ்சமுக விநாயகர் முதன் முதலாக பிரபவ புத்தாண்டில் இரதத்தில் வீதியுலாவரும் காட்சி பக்தர்களை மெய்சிலிர்க்க வைக்கும். பஞ்சமுக விநாயகர் தனது ஈசானம், தற்புருஷம், அகோரகிருதம், வாமதேவம், சத்தியோஜாதம் ஆகிய ஐந்து திருமுகங்களினாலும் இரதத்தில் அருள்பொழிகின்றார். நாளை தீர்த்தோற்சவத்துடன் மகோற்சவம் நிறைவுறும்.

பல பாகங்களிலிருந்து பல அடியார்கள் இவ்விரதோற்சவத்தில் பங்குபற்றி வினைகளை வேரோடறுக்கும் விநாயகப் பெருமானை வழிபடும் காட்சி கண்கொள்ளாக் காட்சி ஆகும். நாவலியூர் சோமசுந்தரப்புலவர் தமது மானிப்பாய் மருதடி விநாயகர் பதிகத்தில் ''வந்தவினையோடும் விக்கினம், வீடுடு! வருகின்ற வினைகள் விலகும்'' என பாடியுள்ளார். நாமும் எமக்குள்ள வினைகளைக் களையும்படி கூறி இத்தினத்தில் அவனருளாலே அவன்தாள் வணங்கி, அவன் புகழ் பாடி ஆன்ம ஈடேற்றம் அடைவோமாக.

-கௌரி கணேசநாதன்-

பராஅத்: நரக மீள் இரவு

அல்லாஹ்த ஆலா முன்வானம் இறங்கி வரும் கிருபையுள்ள இரவு

இறைவனின் அருட்கொடைகளுள் மிகச் சிறப்புப் பொருந்திய: அரிய வரப்பிரசாதமாகிய பராஅத் இரவினை சந்திக்கும் நற்பேற்றினை முஸ்லிம்கள் அனைவரும் இன்று பெற்றுள்ளோம்.

கருணையாளனாகிய அல்லாஹ்தஆலா தனது திருமறையாம் அல்குர்ஆனில் ''ஆயிரம் இரவுகள் வருவதுண்டு; ஆனால் ஓர் இரவின் மதிப்பினையும் மகத்துவத்தையும் யாராலும் மதிப்பீடு செய்யவோ, அளவிடவோ முடியாது. தெளிவான இவ்வேதத்தின் மீது சத்தியமாக இதனை மிக்க பாக்கியமுள்ள ஓர் இரவாக அமைத்து வைத்தோம்'' எனக் கூறியுள்ளான்.

இத்தகைய மாண்புமிகு இரவு எது எனில், சஃபான் பிறை 15 ஆம் இரவில் அமைகின்ற பராஅத் இரவு ஆகும்.

இந்த இரவு பாக்கியம் நிறைந்த இரவு (லைலதுன் முபாறக்), கிருபையுள்ள இரவு (லைலதுன் றஹ்மத்) கணக்குப் பதிவு இரவு (லைலதுன் ஷாஹ்") என்றும் அழைக்கப்படுகிறது. பராஅத் எனும் அரபுப் பதத்தின் பொருள் நரகத்தில் இருந்தும் மன்னிப்பு அளிக்கப்படும் இரவு என்பதாகும்.

இந்த இரவில் எம் பெருமானார் (ஸல்) அவர்கள் விழித்திருந்து நின்ற நிலையில் கால் வீங்கும் வரை கண்ணீர் வடித்து அழுதழுது வணங்கினார்கள். அவர்களது உம்மத்தினராகிய எமது பாவங்களில் நின்றும் மீட்சி பெற்று நரகத்தில் நின்றும் விடுதலை பெறுவதற்காக மன்றாடும் உரிமை வழங்கப்பட்டது

உம்மத்துக்களது பாவங்களுக்காக மன்றாடும் அந்தஸ்தைப் பெற்றுள்ள ஒரேயொரு நபியாகிய றசூல் கரீம் (ஸல்) அவர்களே இவ்விரவில் மிகவும் பயபக்தியுடன் தமது உடல் வருத்தத்தையும் பாராது இறைவனைத் தொழுது மன்றாடியுள்ளார்கள் என்றால் பாவங்களிலேயே சதா மூழ்கிக் கொண்டிருக்கும் மனிதர்களாகிய நாம் எந்த அளவிற்குக் கண்ணீர் மழை பொழிந்து எமது பிழை பொறுத்தலிற்காக இறைவனிடம் மன்றாட வேண்டும்.

இந்த இரவினில் அல்லாஹ் தஆலா முன் வானத்திற்கு இறங்கி வருகின்றான். அவன் நல்லடியார்களைப் பார்த்து என்னிடம் கேட்பவர்கள் உண்டா? நான் கொடுக்கத் தயாராகவுள்ளேன். என்னிடம் பாவமன்னிப்புக் கேட்பவர்கள் உண்டா? நான் அவர்களை மன்னிக்க ஆயத்தமாகவுள்ளேன். என்னிடம் உணவை விருத்தி செய்யும்படி கேட்பவர்கள் உண்டா? நான் அவர்களுக்கு உணவை விஸ்திரணமாக்கவுள்ளேன் என கேட்டவாறு இருக்கின்றான்.

இறைவனின் நல் அடி [illegible] னின் உண்மையான தக்வாவுடன் (பயபக்தியுடன்) இவ்வாறு [illegible] (தூய நம்பிக்கையுடன்) நற்காரியங்களைப் புரிவோமாகவும் எம்பெருமானார் நாயகம் (ஸல்) அவர்கள் இவ் இரவில் பத்து ரக்அத்துகளையுடைய ஸலாத்துல் ஹைறு (நன்றித் தொழுகை) ஒவ்வொரு ரக் அதிலும் சூரத்துல் இஹ்லாஸை 11 முறை வீதம் மொத்தம் 110 முறை பாதிஹா சூராவினைத் தொடர்ந்து ஓதித் தொழுவாராயின், அவனுக்காக மலக்குகள் இறுதி நாள் வரை நற்கலிமைகளை எழுதிக் கொண்டிருப்பார்கள் என்றார்கள்.

நாம் அந்த நற் கூலிகளைப்பெற முயல வேண்டாமா? இவ் இரவில் நோன்பு நோற்பது விஷேடமானதாகும் அடுத்த இரவிலும் தொடர்ந்து நோன்பு வைப்பது மிக விஷேடமானதாகும்.

இந்த இரவினில் யாசீனை மூன்றுமுறை ஓதி பாவப் பொறுத்தலுக்காக மன்றாடுதல் வேண்டும்.

விவசாயி ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிலத்தைப் பண்படுத்துகிறான். பின்பு விதை விதைக்கின்றான் அவ்விதை பன்மடங்காக விளைந்ததும் அதனை அறுவடை செய்கிறான். அவ்வாறே றஜப் மாதம் பண்படுத்தலுக்குரிய காலமாகும். ஷஃபான் மாதம் விதைப்பதற்குரிய காலமாகும். றமழான் மாதம் அதற்குரிய நற் கூலியை அறுவடை செய்யும் காலமாகும். விதைத்தல் என்பது நல்ல அமல்கள் புரிதல் ஆகும். தொழுதல், குர்ஆன் ஓதுதல், நோன்பு வைத்தல், திக்ரு செய்தல், தஸ்பீஹ் சொல்லுதல், போன்ற நற்காரியங்களை இந்த இரவு முழுவதும் புரிந்து நரகிலிருந்தும் மீட்சி பெறுவதுடன் நற் சுவன பதவியைப் பெற முயற்சிப் [illegible] லத்தையும் ஹிதாயத்தையும் அளிப்பானாக.

-மௌலவி ஏ.எம். அப்துல் அஸீஸ்-

பொதிகை...

(3ஆம்பக்கத்தொடர்ச்சி)

பம் மிகுந்த நீற்றறையில் வைத்துப் பூட்டினார்கள். 'எதை அன்பு செய்யவேணுமோ அதை அன்பு செய்து அதையே தொடருவார்கள் உண்மை ஞானிகள்' என்பது 'பண்டிதமணி'யின் எடுத்துக்காட்டு.

அதோ போல நாவுக்கரசர் ஒரே மனத்துடன் இறைவனைத் தொடர்ந்தமையால் நீற்றறையில் இளவேனிற் காட்சியை அனுபவித்தார். அங்கே தென்றல் வீசியது குற்றம் சொல்லமுடியாத இசையுடன் வீணை இனிய நாதம் எழுப்பியது. வண்டுகள் மொய்க்கும் தடாகமும் இருந்தது எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனை நினைவூட்டும் மாலை மதியமும் அங்கே தோன்றியது அவரே அதனைக் கூறுகிறார்.

''மாசில் வீணையும்
மாலை மதியமும்
வீசு தென்றலும்
வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை
பொய்கையும்
போன்றதே
ஈசனெந்தை இணையடி
நீழலே''

பொய்யாமொழி

குறள்:

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை.

பொருள்:

குற்றமே ஒருவனுக்கு அழிவை உண்டாக்கும் பகையாகும் ஆகையால் குற்றம் செய்யாமல் இருப்பதே நோக்கமாகக் கொண்டு காத்துக்கொள்ள வேண்டும்.

நிர்ப்பந்தத்தாலேயே

வி. பி. சிங் ராஜினாமா

புதுடில்லி, ஏப் 13

பாதுகாப்பு அமைச்சர் பதவியில் இருந்து திரு. வி. பி. சிங்கை விலகும்படி இந்திரா காங்கிரஸ் எம். பி.க்கள் பலமாக வற்புறுத்தியதைத் தொடர்ந்தே பிரதமர் காந்தி, திரு சிங்கை ராஜினாமாச் செய்யும்படி கேட்டுக்கொண்டார்

இப்படி ஆஸ்திரேலிய வானொலி நேற்று அறிவித்தது.

இதனிடையில் இந்திய ராஜ்ய சபாவில் ஆளும் கட்சித் தலைவராக வெளியுறவு அமைச்சர் என்டி, திவாரியைப் பிரதமர் நியமித்திருக்கிறார்.

இதுகாலவரை திரு. வி சிங் இப்பதவியை வகித்துவந்தார்,

நீர்மூழ்கிக் கப்பல்கள் வாங்கப்பட்டது சம்பந்தமாக கமிஷன் பெற்ற சம்பவம் தொடர்பான விசாரணை ஒன்றுக்கு அமைச்சரவை, பிரதமர் ஆகியோரின் அனுமதியின்றி திரு. சிங் உத்தரவிட்டார் என்பதே, அவரின் ராஜினாமாவுக்குவழி வகுத்தது.

இதனிடையில் திரு. வி. பி. சிங்கின் ராஜினாமாவை ஏற்றுக்கொண்டது குறித்து 41 இந்திரா காங்கிரஸ் எம். பி.க்கள் பகிரங்கமாக பிரதமர் காந்தியைப் பாராட்டி இருக்கின்றனர்

இது சம்பந்தமாக அந்த எம். பி.க்கள் அறிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றனர்

(இ-எ)

பிஜியில் எதிர்க்கட்சி

ஆட்சியைக் கைப்பற்றியது

பிஜி, ஏப்ரல் 13

பிஜி தீவில், இந்திய தேசிய சம்மேளனத்தின் ஆதரவிலான எதிர்கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது

58 வயதான டாக்டர் வபேந்திரா புதிய பிரதமராகப் பதவி ஏற்றிருக்கிறார்.

1970இல் இருந்து ஆட்சி புரிந்து வந்த கூட்டணிக் கட்சிகளின் அரசாங்கம் பொதுத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டது

பிஜி 1970இல் பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற்றது

இதுவரை ஆட்சி நடத்திய கூட்டணி அரசு மேற்கு நாடுகள் சார்பானது.

இப்போது பதவிக்கு வந்துள்ள தேசியக்கட்சி, இந்திய தேசிய சம்மேளனத்துடன் கூட்டு வைத்துள்ளது. (இ-எ)

ரஷ்ய - இந்திய உறவு தினம்

புதுடில்லி, ஏப்.13

ரஷ்யாவுடன் ராஜதந்திரத் தொடர்புகளை ஸ்தாபித்த 40 ஆவது ஆண்டு நிறைவுதினம் நேற்று புதுடில்லியில் அனுஷ்டிக்கப்பட்டது.

இத்தினம் சம்பந்தமாக ரஷ்யத் தலைவர்களுக்கு இந்தியத் தலைவர்கள் வாழ்த்துச் செய்திகள் அனுப்பி வைத்தனர். (இ-எ)

காமன்வெல்த்தில்

மீண்டும் சேர பாக். முயற்சி

லண்டன், ஏப்ரல் 13

காமன்வெல்த் நாடுகள் அமைப்பில் மீண்டும் சேர்ந்து கொள்வதற்கு பாகிஸ்தான் தீவிர முயற்சி எடுத்து வருகிறது

லண்டன் விஜயத்தின் போது பாகிஸ்தான் பிரதமர் முகமட் ஜுனேஜோ காமன்வெல்த் அமைப்பில் சேர்வது குறித்து பிரதமர் தாட்சருடன் பேச்சுக்கள் நடத்தினார்.

காமன்வெல்த் அமைப்புப் பொதுச்செயலாளர் ரம்பாலுடனும் பாகிஸ்தான் பிரதமர் இது பற்றி பேசினார்

1971 பங்களாதேஷ்யுத்தத்தைத் தொடர்ந்து பாகிஸ்தான் காமன்வெல்த் அமைப்பில் இருந்து வெளியேறியது குறிப்பிடத்தக்கது

(இ-எ)

பொற்கோயிலில் சுனில் தத்

சண்டிகார், ஏப் 13

சமாதான யாத்திரை மேற்கொண்டு பஞ்சாப் சென்ற பிரபல நடிகரும் இந்திரா காங்கிரஸ் எம்பியுமான திரு. சுனில் தத் நேற்று பொற்கோயிலுக்குச் சென்றார்.

காலையில் சென்ற அவரை பொற்கோயில் நிர்வாகிகள் வரவேற்றனர். (இ-எ)

10 ஆண்டுகள் பதவியில் இருந்தும் இனப்பிரச்சினையை தீர்க்க முடிந்ததா?

அனுரா கேட்கிறார் இப்படி

கொழும்பு, ஏப்.14

பத்தாண்டுகள் பதவியில் இருந்தும் இனப் பிரச்சினையைத் தீர்க்க ஜனாதிபதி ஜெயவர்த்தனாவினால் முடிந்ததா?

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா மேற்கண்ட கேள்வியை எழுப்பி இருக்கிறார்.

வறக்காப்பொலையில் நடைபெற்ற சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் திரு. அனுரா பண்டாரநாயக்கா பேசினார்.

அப்போது அவர் மேலும் சொன்னதாவது:

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் முடியாது என்றும் தன்னால் தான் தீர்வுகாண முடியும் என்றும் ஜனாதிபதி ஜெயவர்த்தனா கூறி வருகின்றார்.

திரு. ஜெயவர்த்தனா பதவிக்கு வந்தது 1977 ஆம் ஆண்டில் தற்போது 1987 ஆம் ஆண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

பத்து ஆண்டுகளாக பதவியில் இருக்கும் திரு. ஜெயவர்த்தனாவினால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடிந்ததா?

இப்படி திரு அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார். (இ-ஐ-எ)

சமய சந்நிதிகளில்

இன்று தேர்

பண்டத்தரிப்பு, ஏப் 13

மானிப்பாய்மருதடிவிநாயகர் ஆலயத்தில் இன்று வருடாந்த தேர்த்திருவிழா நடைபெறுகிறது.

புதுவருடப் பிறப்பான இன்று காலை விசேஷ ஆராதனைகள் கற்பூர தீபாராதனைகளை அடுத்து 9 மணிக்கு விநாயகப் பெருமான் உள்வீதி உலாவந்து தேரேறுவார்

நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்த உற்சவம் நடைபெறவுள்ளது. (இ-120)

வருஷப்பிறப்பு உற்சவம்

யாழ்ப்பாணம்.ஏப் 14

வண்ணை - சாத்தைவரி மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் பிரபவ வருஷப் பிறப்பு உற்சவம் இன்று நடைபெறவுள்ளது.

காலையில் விசேஷ அபிஷேக ஆராதனையும் வருடப்பிறப்புப் பூசையும் மாலையில் பூசையும் பஞ்சமுகார்ச்சனையும் இடம்

புதுவருட விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப் 14

வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம், வட்டுக்கோட்டை பொதுமக்களுடன் இணைந்து நடத்தும் புதுவருட விளையாட்டுவிழா இன்றுசெவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது.

வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக மைதானத்தில் பிற்பகல் 3மணிக்கு ஆரம்பமாகும் இந்தப் போட்டிகளை சங்கானை உதவி அரச அதிபர் திரு த வைத்திலிங்கம் கழகக்கொடியை ஏற்றி ஆரம்பித்து வைப்

20 குடும்பங்கள் திரும்பி வந்தன

முள்ளிவளை, ஏப். 14

திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து முல்லைத்தீவில் தங்கி உள்ள அகதிகளில் சுமார் 50 குடும்பங்கள் அரசாங்கத்தின் நிதி உதவியுடன் இருவாரங்களுக்கு முன் திருமலைக்குச் சென்ற போதிலும் அவற்றில் 20 குடும்பங்கள் மீண்டும் முல்லைத்தீவு திரும்பிவிட்டன

இப்படிச் சென்றவர்களைத் திருமலையில் ஊர்காவல் படையினரும் ஆயுதப் படையினரும் கட்டிவைத்து தாக்கினர் என்று பிரசைகள் குழுப் பேச்சாளர் ஒருவர்

(பிரிவு 3) O/L Day Class
எமது வழமையான சிறப்புமிக்க
Super Grade ஆசிரிய குழுவினரால்
ஆரம்பம்: April 20 இல்
Mon 7-30 a.m.
விபரங்கட்கு:
Bitsmans Institutes
MANIPAY.

உதயன்
14. 04. 1987 செவ்வாய்க்கிழமை

A/L 89 பிரிவு 2
கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புக்கள்
எமது வழமையான Super Grade
பட்டதாரி ஆசிரிய குழுவினரால்
ஆரம்பம் April 18 இல்
Sat 7-45
விபரங்கட்கு:-
Bitsmans Institutes
MANIPAY.

அன்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எங்கள் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
A Great Way To Multiply Your Money

SHABRA
UNICO finance LTD.

அதி உயர் வட்டி வழங்கும்
நாணயமும் பாதுகாப்பும் நிறைந்த நண்பன்
"ஷப்ரு" யுனிக்கோ
நிதி நிறுவனம்
★ எப்பொழுதும் நிதித்துறையில்
உங்கள் நண்பன்
"ஷப்ரு"வே!

பேச்சு வெற்றி என்றால்

ஜே. ஆர். டில்லி சென்று ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவார்

கொழும்பு, ஏப். 14

தமிழ்ப் போராளிகளுடனான பேச்சுக்கள் வெற்றி அளித்தால் ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தனா புதுடில்லி சென்று ராஜீவ்காந்தியுடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவார்.

அமெரிக்காவில் இருந்து வெளியாகும் "டைம்" சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி மேற்கண்டவாறு கூறினார்.

பேட்டியில் அமைச்சர் மேலும் கூறியிருப்பதாவது:-

பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்தால் இலங்கை அரசு தமிழ்ப் போராளிகள் மீது முழு அளவிலான இராணுவ நடவடிக்கையை எடுக்கும்,

யுத்த நிறுத்த காலத்தின் முதல் வாரத்தில் எதுவித அசம்பாவிதங்களும் இடம் பெறவிட்டால் துண்டிக்கப்பட்ட தொலைபேசித் தொடர்பு மீண்டும் பொருத்தப்படும்.

அசம்பாவிதங்கள் இல்லாமல் மேலும் ஒரு வாரம் கழிந்தால் எரிபொருள் தடை அகற்றப்படும்.

மேலும் இன்னொரு வாரம் நீடிப்பின் பேச்சுக்களை நடத்த தூதுக்குழு ஒன்றை ஜனாதிபதி புதுடில்லிக்கு அனுப்பிவைப்பார்.

இப்படி "டைம்" சஞ்சிகைக்கான பேட்டியில் அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார். (இ-எ)

தமிழ்நாடு உயர் நீதிமன்றம்

சென்னை, ஏப். 13

'சென்னை உயர் நீதிமன்றம்' என்பது 'தமிழ்நாடு உயர் நீதிமன்றம்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

இப்படி தமிழ்நாடு அரசு, மத்திய அரசைக் கோரியிருக்கிறது.

இதனிடையில் சென்னை உயர் நீதிமன்றப் பற்றிய விவரங்களை மத்திய அரசு கோரியுள்ளது (இ-எ)

போகம்பரை - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகிறது.

பதினெட்டு மாதங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை நீதிமன்றம் முன் நிறுத்துங்கள்; அல்லது விடுதலை செய்யுங்கள்-

இந்தக் கோரிக்கையை முன்வைத்தே தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளனர். (இ-எ)

வித்தாரம்

வரவேண்டும் முரளி வாரி! வரவு நல்வரவாகுக!! புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!!!

வருஷமும் நல்ல நாளுமாய் கோயிலுக்குப் போயிட்டு வாறீர் போல

வெளி நிலைமை எப்பிடியும் இருக்கலாம். காலையில எழும்பிக் குளித்து முழுகி, கோயிலுக்குப் போய் கும்பிட்டு வாறதைப் போல மனதுக்கு வேறு நிம்மதி இல்லை.

எங்களுக்கு மேலேயும் ஒருத்தன் இருக்கிறான். அவனின்றி இந்த உலகத்தில ஒரு அணுவும் அசையாது அவன் தான் எல்லாத்தையும் இயக்கும் சக்திவான்.

அவன் மீது நம்பிக்கை வைத்தால் எந்தக் காரியத்தையும் வெல்லலாம்.

நாம் இப்போது அனுபவிக்கும் கஷ்டங்களை வேறு யாரோ தருவதாக நினைக்கக்கூடாது. நாம் செய்த வாழ்வினை தான் அரசாங்கம் என்னும் கருவி மூலம் எங்களை வாட்டுது; வதைக்கிது.

அந்த வாழ்வினையைப் போக்கி உதவுமாறு கடவுளிடம் கேட்டு, அவனிடம் மன்றாடி அவனைத் துதித்து வரவேண்டும் வேண்டுவார் வேண்டுவதை ஈவதால் தான் அவனுக்கு ஈசன் என்னும் நாமம்.

இண்டைக்கு நீ காலையிலே கோயில் தரிசனம் செய்து புத்தாண்டை அடக்கமாய் கொண்டாடினதுக்காக உன்னைப் பாராட்டுறேன்.

இண்டைக்கு எங்களுக்கு மட்டுமில்லை பௌத்தர்களுக்கும் புது வருஷம் தான். இராணுவத்தினரில பல பேர் அந்த மதத்தைச் சேர்ந்தவை. ஆனால் வடக்கை வந்தவை புதுவருஷத்துக்கு தெற்கை போக முடியாமல் வாடுகினம். லீவு குடுக்கப் பெரிய அதிகாரிகள் மறுக்கினமாம்.

நாட்டைக் காக்க எண்டு படையில சேர்ந்தவைக்கு என்ன லீவு வேண்டிக் கிடக்கு எண்டு அரசாங்க அதிகார மட்டம் கேட்குதாம்.

ஆனால் விகாரைகளிலும், பன்சாலைகளிலும் போய்ப் பேசேக்கை மத சுதந்திரம் இஞ்சை பாலாய் ஓடுது எண்ட மாதிரிப் பேசுகினம். தங்கடை சொந்தச் சிப்பாய்கள் வருஷப்பிறப்பண்டு விகாரைக்குப் போற மதசுதந்திரத்தையே மறுக்கினம். எந்த விஷயத்திலேயும் அவை சொல்லுறது ஒண்டு; செய்யிறது இன்னொண்டு.

எங்கடை கோயில்களை உடைச்சு எங்கடை வழிபாட்டுச் சுதந்திரத்துக்கு குந்தகம் விளைவிக்கினம் எண்டு பார்த்தா, தங்கடை சொந்தச் சிப்பாய்மாற்றை வழிபாட்டுச் சுதந்திரத்துக்கும் தடைபோட்டிருக்கினம்.

இந்த ஒரு விஷயத்திலதான் தமிழருக்கும் சிப்பாய்களுக்கும் "சமநீதி" வழங்கியிருக்கினம். அதுக்காக அத்துலத்தாருக்குப் புது வருஷத்தண்டு ஒரு இனிய "கொம்பிளிமெண்ட்" குடுக்கலாம் எண்டு நினைக்கிறேன்!

வாடிக்கையாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் அன்பர்களுக்கும்
எமது புதுவருட வாழ்த்துக்கள்

குறுகிய காலத்தில்
மக்களின் நன்மதிப்பையும்
ஆதரவையும் பெற்ற
ஒரே ஜவுளி நிறுவனம்

இளவரசி
★ DEALERS IN TEXTILES and FANCY GOODS ★
S-12 நவீன சந்தை, ✱ சுன்னாகம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி இரண்டாம் ஒழுங்கை 15ம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி 14-04-1987 தொலைபேசி இல. 24805, 22073
Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15, Second Lane, Power House Road, JAFFNA.
Post Office Under Number QJ/ 94 /N/87 Telephone 24805, 22073